# காங்கரஸ் பூராவும் ஹிந்து மயம்.

## ஹிந்து ஆதிக்கத்தை வளர்ப்பதே அதன் நோக்கம்.

### காங்கரஸ் முஸ்லீம் மந்திரிகள் முஸ்லீம் பிரதிநிதிகளல்ல.

### மாகாண கவர்னர்கள் மைனாரட்டிகளுக்குப் பாதுகாப்பளிக்கவில்லை.

காங்கரஸ் பூர்வ லக்ஷ்யம் வேறு; தற்கால லக்ஷ்யம் வேறு.

### இரண்டுக்கும் பரஸ்பர சம்பந்தமில்லை.

### முஸ்லீம்கள் காங்கரசில் சேர்வது ஆபத்து.

தற்கால நிலைமையில் வகுப்புச் சங்கங்கள் தேவையே.

### மௌலானா ஹஸரத் மோஹானி கருத்து.

—)●(—

லட்சுமணபுரி, செப். 27— லட்சுமணபுரி முஸ்லீம்களின் மாபெரும் கூட்டமொன்று சென்ற வியாழக்கிழமை தினம் அமீனுத்தௌலா நந்தவனத்தில் பரங்கி மஹல்லா மௌலானா இனாயத்துல்லா அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இப்பொதுக் கூட்டம் லட்சுமணபுரி முஸ்லீம் லீக் சங்க ஆதரவில் கூட்டப்பட்டது. இக்கூட்டத்தில் கான்பூர் முஸ்லீம் சமூக தலைவர் மௌலானா ஹஸரத் மூஹானி அவர்கள் பேசியவர்களில் முக்கியஸ்தராவார்.

அக்கிராசனரவர்களுடைய அனுமதியின்பேரில் காங்கரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் சிலரும், புதிதாக அமைக்கப்பட்ட ஆஜாத் லீக்கைச் சேர்ந்தவர்களும் கூட்டத்தில் பேசினார்கள்.

ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள் பேசும்போது இதர கட்சியினர் கரகோஷம் செய்து தடுத்தனர். கேள்விகள் கேட்டுத் தடை செய்தனர்.

**மௌலானா மூஹானி.**

மௌலானா ஹஸரத் மூஹானி பேசுகையில் கூறியதாவது;—

"இந்தியாவின் விடுதலைப் போராட்டத்தில் வெகுசில முஸ்லீம்களே சேர்ந்திருந்த சமயத்தில் நான் காங்கரசில் சேர்ந்து இந்தியாவின் விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டேன்.

காங்கரசில் நான் 190?ல் மெம்பராகச் சேர்ந்தேன். அது முதற்கொண்டு நாட்டின் விடுதலைக்காகவும், சுயேச்சைக்காகவும் காங்கரஸ் எடுத்துக்கொண்ட ஒவ்வொரு இயக்கத்திலும் வேலையிலும் ஈடுபட்டு நான் வேலை செய்து வந்துள்ளேன்.

ஆனால் இன்று காங்கரஸ் அதன் உண்மைலட்சியங்களைப் பின்பற்றி நிற்கவில்லை.

காங்கரஸ் இன்று நாட்டின் விடுதலைக்காகப் போராடவில்லை. ஹிந்து ஆதிக்கத்தைப் பலப்படுத்தவே காங்கரஸ்இன்று வேலை செய்து வருகிறது.

இக் காரணம்பற்றியே தான் அகில இந்திய முஸ்லீம் லீக் போன்ற சமூக ஸ்தாபனங்கள் ஏற்படவேண்டிய அவசியமும் நிர்ப்பந்தமும் ஏற்பட்டுள்ளது.

முஸ்லீம் சமூகநலனைப் பாதுகாக்கவும், உரிமைகளைக்காக்கவும் இத்தகைய ஸ்தாபனங்கள் தேவையென்ற அவசியம் ஏற்பட்டதாலேயே இந்த சமூக ஸ்தாபனங்கள் தோன்றின.

இந்தியா கவர்ன்மெண்டு புதிய சட்டம் சிறுபான்மையினர்களுக்கு சில பாதுகாப்புகள் கொடுத்திருக்கின்றன.

மாகாண மந்திரி சபைகளில் சிறுபான்மையினர்களுக்கு தக்க பிரதிநிதித்துவம் கொடுக்கப்படும்படியாக ஆக்டு கவர்னர்கள் மீது பொறுப்பை யுண்டாக்கியுள்ளது. காங்கரஸ் கட்சி பெரும்பான்மையாகவுள்ள மாகாணங்களில் நியமிக்கப்பட்டுள்ள பிரதிநிதிகள் முஸ்லீம் சமூகத்தின் உண்மைப் பிரதிநிதிகளாகமாட்டார்கள்.

இவ் விஷயத்தில் மாகாண கவர்னர்கள் தங்கள் பொறுப்பை யுணர்ந்து கடமையைச் செய்யாதது பலமாகக் கண்டிக்கத்தக்க விஷயமாகும்.

சிறுபான்மையினர்களுக்கு எவ்வித அநீதியும் செய்யப்படாமல் தடுக்க கவர்னர்களுக்கு அதிகாரம் கொடுக்கப் பட்டுளது."

உத்தியோகப் பதவி ஏற்பது கூடாதென்பதாக பாசாங்கு செய்து கொண்டே காங்கரஸ் கட்சியில் உத்தியோகப் பதவி ஏற்ற முழு விவரத்தையும் மௌலானா விளக்கிப் பேசுகையில் கூறியதாவது:—

"உத்தியோகப் பதவியை காங்கரஸ் ஏற்றது போன்றே பெடரல் திட்டத்தையும் காங்கரஸ் ஏற்குமென்பது திண்ணம்.

பெடரல் திட்டத்திற்கு இப்போது காங்கரஸ் காட்டும் எதிர்ப்பும் கண்டனமும், உத்தியோகப் பதவி ஏற்பதற்குக் காட்டிய எதிர்ப்பும் கண்டனமும் போன்றேதான்.

நாட்டின் விடுதலைக்காக காங்கரஸ் போராடுவதற்குப் பதிலாக ஹிந்து சமூகத்தைப் பலப்படுத்த காங்கரஸ் இன்று வேலை செய்தாலேயே நான் இன்று காங்கரஸை விட்டு விலகி நிற்கிறேன்.

ஹிந்துக்கள் நலனைப் பாதுகாப்பதே காங்கரசின் அலுவலாக இன்று இருந்து வருகின்றது.

இக்காரணம் பற்றியே நான் இன்று காங்கரசுடன் சேர்ந்துழைக்க முடியாமலிருக்கிறது.

முஸ்லீம்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் நலனைக்காக்கவும் பாடுபடும் முஸ்லீம் லீகில் முஸ்லிம்களெல்லோரும் மெம்பர்களாகச் சேர்ந்து முஸ்லிம் லீகை ஆதரிக்கவேண்டுமாக கேட்டுக் கொள்ளுகிறேன்.

இதரர்கள் முஸ்லீம் லீக் வாதிகளை சமூக வாதிகளெனக் கூறினும் கூறட்டும். லட்சியம் செய்யவேண்டாம்.

முஸ்லிம் லீகில் சேர்ந்து லீக் ஸ்தாபனத்தைப் பலப்படுத்துங்கள்" என்று கூறி முடித்தார்.

(ஸை. இ.)

## காங்கரஸ் வக்ரகதி.

### "தமிழ் நாடு"

"தமிழ்நாடு" தினசரி மீண்டும் வெகு சீக்கிரம் வெளி வருமென்றும் அதன் கொள்கை முன் போல தேசியக் கொள்கையாகவே இருக்குமென்றும் அறிவிக்கப்படுகிறது.

### மதுவிலக்கால் வந்த விளைவு

15000 மரமேறிகளுக்கு வேலையில்லை

1500 வெண்டர்களுக்கு தொழிலில்லை

சேலம். அக் 1.

சேலத்திலே மதுவிலக்கு ஆரம்பித்ததால் கள், சாராயம் முதலியன விற்றுவந்த 1500 வெண்டர்களும் 15000 மரமேறிகளும் வேலையில்லாது தெருவிலே பரிதவிக்க விடப்பட்டு விட்டார்கள்.

மரமேறிகளில் 1000 பேர் ஜில்லா போர்டுகளில் கூலிவேலையாக அமர்ந்து கொண்டார்கள். சுமார் 2000 பேர்களுக்குமேல் வேறுஜில்லாக்களுக்குச் சென்று குடியேறி விட்டார்கள். மீதமுள்ளவர்கள் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்.

### போர்டு ஸ்கூல்களில் 'வந்தே மாதரப்' பாட்டு

### குண்டூர்முஸ்லீம்கள் எதிர்ப்பு

(ஒரு நிருபர்)

குண்டூர், அக். 1

நேற்றுமாலை இவ்வூர் முஸ்லீம்கள் கூட்டமொன்று தோமூர் மஹ்பூப் அலிபெய்க் எம். எல். ஏ. தலைமையில் கூடிற்று போர்டு ஸ்கூல்களில் பாடம் ஆரம்பிப்பதற்கு முன் "வந்தே மாதர"ப்பாட்டுப்பாட வேண்டும் என்ற தீர்மானத்தை குண்டூர் ஜில்லா போர்டார் நிறைவேற்றியிருப்பதை இக்கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது என்ற தீர்மானத்தை நிறைவேற்றிற்று.

### பாரிஸ்டர் ராமசாமிமீது மாகாண காங்கரஸ் கமிட்டித் தீர்ப்பு.

சென்னை, ஆக. 18.

த. நா. மா. கா. கமிட்டி,

காங்கரஸ் விடுதி,

மௌண்ட்ரோடு.

சேலம் பாரிஸ்டர் தோழர் எஸ். வி. ராமசாமி அவர்களுக்கு,

அன்பார்ந்த ஐயா,

த நா. கா. கமிட்டியின் நிர்வாகக் கமிட்டி 15-8-37ம் தேதி கூடி கீழ்காணும் தீர்மானத்தை நிறைவேற்றி வைத்திருக்கிறது.

**தீர்மானம்.**

தர்மபுரி ஜில்லா போர்டு காங்கரஸ் கட்சிக் காரியதரிசி தோழர் எஸ். வி. ராமசாமி அவர்கள் "விடுதலை"யில் காங்கரசுக்கே இழிவுண்டாகும் முறையில் மந்திரிசபை அமைத்த காங்கரஸ் கட்சித் தலைவரையும், காங்கரஸ் கட்சியையும் காங்கரஸ் மந்திரி சபையையும் கண்டித்து வெளியிட்ட வியாசத்தையும், அவருடைய அறிக்கையையும், சேலம் ஜில்லா கா. கமிட்டியின் தீர்மானத்தையும் கண்டோம்.

தோழர் ராமசாமியின் பதில் திருப்திகரமாயுமில்லை. தாம் செய்த செய்கை நியாயமானதென்றும் நடிக்கிறார். காங்கரசிலே அவர் மெம்பராயிருக்க அருகதையற்றவராயிருப்பதால் காங்கரசை விட்டு அவர் மூன்று வருடங்களுக்கு நீக்கப்பட்டிருக்கிறார். அவர் தமது கட்சிக் காரியதரிசி பதவியையும் ஜில்லா போர்டு மெம்பர் பதவியையும் ராஜிநாமா செய்யவேண்டும். மேலும், மூன்று வருடங்களுக்கு எந்த காங்கரஸ் ஸ்தாபனங்களுக்கோ, ஸ்தல ஸ்தாபனங்களுக்கோ, சட்டசபைக்கோ நிற்பதிலிருந்து அவர் விலக்கப்பட்டிருக்கிறார்.

தங்கள் அன்புள்ள,

(Sd) சி. பி. சுப்பையா,

காரியதரிசி.

இதன் நகல் சேலம் ஜி. கா. கமிட்டிக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

(சரியான மொழி பெயர்ப்பு. தடித்த வார்த்தைகள் என்னுடையது. எஸ். வி. ஆர்.)